# எஸ். ராமகிருஷ்ணனின் சிறுகதைகளில் காணலாகும் இலக்கிய உத்திகள்

ரா.சுமித்ரா[1] மற்றும முனைவர். வளர்மதி[2]

[1]பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), மதுரை-2.

[2]தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), மதுரை –2.

---

## Abstract:

The short story is a strong form. This is not so easy to handle. The specialty of a short story is that it keeps the reader hooked like a fish caught on a baited hook as soon as the plot begins. Daily problems become the subject of the songs. Life is talked about in the stories of this period and If refers to the problems that need to be solved. Reading stories is not only a pleasure for the mind. The story should also instill a good idea in the heart of the readers. For that, some strategies should be used in the stories. S.Ramakrishnan, is shortly called as in tamil ES.Ra. was the master of many intellects that drew the world into its abode like molasses dragged by ants. This research paper highlights the literary techniques used in his collection of short stories named Mazhaiman.

## Keywords:

Strategies, Horse racing, Rhetoric, Word usage, Emotion, Perception, Imagination, Characters, Organization.

### ஆய்வுச்சுருக்கம்:

சிறுகதை என்பது ஒரு கனமான கலை வடிவம். இதைக் கையாள்வது அவ்வளவு எளிதல்ல. கதைக்களம் தொடங்கியதுமே வாசகனைத் தூண்டில் கொக்கியில் மாட்டிய மீனைப்போல் தப்பவிடாமல் செய்வது சிறுகதையின் சிறப்பு. இக்காலக் கதைகளில் வாழ்க்கை பேசப்படுகிறது. அன்றாடச் சிக்கல்கள் பாடுபொருளாகின்றன. தத்தம் சிக்கல்களை தாம் தீர்வுகாண விழைவனவற்றை எடுத்துரைப்பதாக அமைகிறது. கதைகளை வாசிக்கும் போது மனதிற்கு மகிழ்ச்சியைத் தருவது மட்டுமன்று. படிப்பவரின் நெஞ்சில் சிறந்த கருத்தை

விதைப்பதாகவும் அமைய வேண்டும். அதற்கு சில உத்திகளை கதைகளில் கையாள வேண்டும். எறும்புகள் இழுத்துக் கொண்டு போகும் வெல்லக்கட்டியைப் போல உலகை தனது இருப்பிடத்திற்குள் இழுத்துக் கொண்டு வந்துவிட சிறப்பான பல உத்திகளை கையாண்டவர்தான் எஸ்.ரா. என்று அழைக்கப்படும் எஸ். இராமகிருஷ்ணன். இவருடைய மழைமான் என்ற சிறுகதைத் தொகுப்பில் கையாண்டுள்ள இலக்கிய உத்திகளை வெளிக்கொணர்ந்து எடுத்துரைப்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:**

உத்திகள், குதிரைப்பந்தயம், சொல் பயன்பாடு, உணர்ச்சி, கருத்து, கற்பனை, குணாம்சம், ஒழுங்கமைதி, சொல்லாட்சித்திறன்.

## முன்னுரை:

மக்களின் கதை கேட்கும் ஆர்வம் தொல்பழங்காலந்தொட்டே வேரூன்றியுள்ளது. அதன் பல்வேறு வெளிப்பாடுகள்தாம் தொடக்கம் முதல் இன்றுவரை இதிகாசங்கள், காப்பியங்கள், புதினங்கள், சிறுகதைகள், நாடகங்கள், கூத்துகள் எனப் பல்வேறு வடிவங்களைப் பெற்றுத் திகழ்கின்றன. இன்றைய நிலையில் இலக்கிய உலகில் சிறுகதைகளுக்கென்றே ஒரு தனித்த இடம் உள்ளது. கதையானது படிப்பவரின் நெஞ்சில் மின்வெட்டைப் போல் பாய்ச்சும் ஆற்றலும் குதிரைப் பந்தயம் போல தொடக்கமும் முடிவும் சுவை மிக்கதாகவும் அமைய வேண்டும். ஒரு படைப்பின் வெற்றிக்குச் சிகரமாக அமைவது சொல்லாட்சித் திறனே. உரிய சொல்லை உரிய இடத்தில் சிந்தித்து அமைப்பதே சொல்லாட்சித் திறன். அத்திறனைக் கையாள உறுதுணையாய் இருப்பது உத்திகளே. உத்திகள் என்பது ஆசிரியன் தன் கருத்தை வெளிப்படுத்துவதற்குப் பின்பற்றும் சிறப்பு முறை கொண்ட வெளிப்பாடு. அவ்வுத்திகளை கையாள்வதில் உச்சம் தொட்டவர் எஸ்ரா. தன் சிறுகதைச் சிம்மாசனத்தில் அழகு சித்திரமாய் வீற்றிருக்கும் **‘எஸ். இராமகிருஷ்ணனின் சிறுதைகளில் காணலாகும் இலக்கிய உத்திகள்’** என்ற தலைப்பின் மூலம் சமுதாயத்தில் நிகழும் நிகழ்வுகளை பிரதிபலித்துக் காட்ட பயன்படுத்திய உத்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு நெறிமுறைகள்:

### உத்திகள்:

ஒரு கலைப் படைப்பை உருவாக்குவதற்குப் படைப்பாளன் மேற்கொள்ளும் நுண்ணிய அணுகுமுறை உத்தியாகும். “ஒத்தகாட்சி உத்திவகை விரிப்பான்”[1] என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. உந்தி எழும் நுண்ணறிவை உத்தி என்கிறது.

“உத்தி என்பதை நன்னூல் தந்திர உத்தி”[2] என்று குறிப்பிடுகிறது. இலக்கியம் படைக்கும் படைப்பாளி தாங்கள் கூறும் கருத்துகள், கொள்கைகள், கூற வரும் செய்திகள் போன்றன மக்களை நேரடியாகச் சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்தில் கையாண்ட பல வழிமுறைகளே உத்திகள் என்று அழைக்கப்படுகின்றன.

### உணர்ச்சி உத்தி:

“விடை தர வேண்டிய தேவை இல்லாமல் கேள்வியிலேயே பதில் இருப்பதைப் போல” அமைவது உணர்ச்சி உத்தி ஆகும். மனமே கூறுவது போல் மன உணர்வினை வெளிப்படுத்தப் பயன்படுத்திய உத்தி உணர்ச்சி உத்தி.

உணர்ச்சி என்பது மனநல செயல்பாட்டு அனுபவம் ஆகும். இது தீவிர உயர்மட்ட இன்பம் அல்லது அதிருப்தி ஆகியவற்றால் தனித்தன்மையளித்து வகைப்படுத்தப்படும் செயல் ஆகும். உணர்ச்சி எனும் கூறு பெரும்பாலும் மனநிலை, குணாம்சம், ஆளுமை, ஒழுங்கமைதி மற்றும் ஆர்வமூட்டல் ஆகியவற்றுடன் பிணைந்துள்ளது.

நாம் அனைவரும் உணர்ச்சிகளை அனுபவித்திருக்கிறோம். நம் வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் அதைத் தொடர்கிறோம். சில சமயங்களில், ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உணர்ச்சிகளை நாம் உணரலாம். சில சமயங்களில் முரண்பாடான உணர்ச்சிகளையும் கூட உணரலாம். சில நேரங்களில் உணர்ச்சிகள் மிகவும் தீவிரமாக இருக்கலாம்.

உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது என்பது ஒரு தனித்துவமான கலை. பல்வேறு மொழிகள் இருந்தாலும் நம் உணச்சிகளை நேர்த்தியாக வெளிப்படுத்துவதே அவற்றின் அடிப்படை நோக்கம் ஆகும். உணர்ச்சிகளை அழகாகவும் மற்றவர்கள் புரிந்து கொள்ளும் விதமாகவும் வெளிப்படுத்துவது மிகச் சிறந்த கலை. சில சமயம் நம் நடிவடிக்கை பிறரை காயப்படுத்தி விடுமோ என்று பல நேரங்களில் நம் உணர்ச்சிகளை வெளிப்படுத்தாமல் புதைத்து விடுகிறோம். அடக்கப்படும் உணர்ச்சிகள் மனித மனதின் மகிழ்வைக் களவாடிச் செல்கிறது.

உணர்ச்சிகளைப் புரிந்துக்கொண்டு எந்தச் சூழ்நிலையிலும் அவற்றை நேர்மறையாக வெளிப்படுத்தும் போது நம்முடைய ஆளுமைத் திறன் மேம்படும்.

கதைச் சொல்லும் நாயகராம் எஸ். இராமகிருஷ்ணன் பல உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் கதைகளை படைத்து அதை வாசிக்கும் வாசகர்களாகிய நம்முடைய உள் மனதின் உணர்வினைத் தொடும் ஆளுமைத் திறன் கொண்டவர் என்பதனை "வெறும் பிரார்த்தனை" என்னும் சிறுகதை மூலம் அழகாக வெளிப்படுத்தியுள்ளார். 'சரஸ்வதி' என்ற கதாபாத்திரத்தின் மூலம் ஒரு குடும்பச் சூழலை மட்டும் முன்னிறுத்தி அனைத்து உணர்வுகளையும் வெளிப்படுத்தி அறுசுவை விருந்து படைத்துள்ளார். 'காதம்பரி' என்ற மூத்த மகள் கதாபாத்திரம் மூலம் 'வெறுப்பு' உணர்வை வெளிப்படுத்திய பாங்கும் 'ரமா' என்ற இளைய மகள் கதாபாத்திரம் மூலம் 'சலிப்பூட்டும்' உணர்வையும் 'காதம்பரி, ரமா' என்ற இரு சகோதரிகளும் இணைந்து கலந்துரையாடும் போது 'பயம்' என்ற உணர்வையும் வெளிப்படுத்திய சூழல் மிகவும் அருமையாக இருந்தது.

சரஸ்வதியின் கணவன் குடிகாரன். மற்றவர்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் இருந்ததோடு அவர்களின் உணர்ச்சிகளை உதாசினப்படுத்தியது வாசகர்களின் கோபத்திற்கே உச்சமாக அப்பகுதி அமைந்தது எஸ்ராவின் ஆளுமைத் திறனை ஆச்சர்யத்திற்கு உள்ளாக்கியது.

இக்கதையில் சரஸ்வதி தன் உள்ளுணர்வின் உணர்ச்சிகளை உள்ளுக்குள்ளே புதைத்து கண்ணீரில் வெளிப்படுத்தியது அவள் மனநிலையை மட்கிப்போகச் செய்தது போன்று அமைந்தது. 'காதம்பரி' வேலை செய்யும் மருந்தக முதலாளி தினந்தோறும் இரண்டு முறையாவது கடுமையாகத் திட்டி தன் கோப உணர்வை வெளிப்படுத்திய விதமும் கோபத்தை வெளிப்படுத்தினாலும் வேலை விட்டு போகும் போது 'பத்திரமா போகணும் பாப்பா' என்று கூறும் போது அன்பு உணர்வையும் அத்துடன் ஒரு சாக்லெட்டையும் நீட்டுவார். தலையாட்டியபடியே அதை வாங்கிக் கொண்டு அதை வாயிலிட்டு சுவைத்த படியே நடக்கத் துவங்குவாள். வீடுவரை அந்த சாக்லெட்டை சுவைத்துக் கொண்டே செல்வாள். ஒரு நாளின் மொத்த வலியையும், கோப உணர்ச்சியையும் உள்வாங்கிய கனத்த மனதையும் கரைத்து விடும் அந்தச் சுவை.

ஒரு மனிதனின் கோபம் சாக்லெட் போன்று நிமிடத்தில் கரையக் கூடியது அதன் சுவையை மனதில் தக்க வைப்பது போல் கோபச் சொல்லும் மனதை விட்டு நீங்காது.

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு"[3] (திருக்குறள் - 129)

என்ற குறளுக்கு ஏற்ப தீப்புண் எளிதில் ஆறிவிடும். நாம் வெளிப்படுத்தும் வீரிய செயலும், சொல்லும் என்றும் ஆறாமல் வடுவாகவே இருக்கும். ஆம்! உணர்ச்சிகளே ஆற்றலின் ஊற்று. எனவே உணர்ச்சிகளை முறையாக வெளிப்படுத்துவோம்! மகிழ்ச்சியை நலமுடன் தக்கவைப்போம்!

## சொல் பயன்பாட்டு உத்தி:

சொற்களை அளவாகப் பயன்படுத்தி உரைநடையை அழகு செய்வது ஒரு சிறந்த உத்தி. அந்த வகையில் 'விரும்பிக் கேட்டவள்' என்னும் சிறுகதையில் 'வசந்தி' என்னும் கதாபாத்திரம் இனிய குரல்களின் பாடலுக்கு அடிமையானதையும், குரலுக்கு அழுத்தம் கொடுத்து குரலின் மூலம் மன அழுத்தம் குறையும் பாங்கையும் சொல் அழுத்தம் மூலம் ஆசிரியர் கூறியுள்ளார்.

'இந்த உலகத்திலேயே மனுசனோட குரலுதான் பெரிய ஆச்சர்யம்' அது என்னவெல்லாம் மாயம் பண்ணுது. சிலரோட முகம் மறந்து போய் குரல் மட்டும் தான் ஞாபகத்தில் இருக்கும். குரலுக்கு வாசனை இருக்கு, நிறம் இருக்கு, வெளிச்சம் இருக்கு, ருசியும் இருக்கு. நான் அதிலேயே கிறங்கிப் போயி கிடக்கேன் என்ற வசந்தியின் வசனத்தின் மூலம் குரல்தான் இக்கதையின் கருவூலமாக உள்ளதை தெரிவித்துள்ளார்.

"திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங்கு இல்"[4] (திருக்குறள் 644)

என்ற குறளுக்கிணங்க கேட்பவரது மனப்பான்மையை அறிந்தே எந்தச் சொல்லையும் சொல்ல வேண்டும் என்பது போல் கேட்போரின் மகிழ்ச்சிக்கு ஏற்றாற் போல் இக்கதையில் இசைப்பாடல் அமைந்து இருக்கிறது. மரணத் தருவாயிலும் இனிமையான குரல் இசை அவள் மனதை மகிழ்ச்சியாக வைத்திருந்தது.

'மழைமான்' என்ற கதையில் 'தேவபிரகாஷ்' என்ற கதாபாத்திரத்தின் மூலம் மனம் விரும்பியதை நாம் உடனே செய்கிறோம் என்ற வாசகத்திற்கு அழுத்தம் கொடுத்திருப்பதை உணர்த்தும் விதமாக கதையின் தொடக்கமே 'தேவபிரகாஷிற்கு உடனே ஒரு மானைப் பார்க்க வேண்டும் போலிருந்தது' என்று அவன் மன விருப்பத்திற்கு அழுத்தம் கொடுத்து தொடங்கி இருக்கிறார்.

கதையின் கருவூலமே சொற்களின் அழுத்தமாய் இடம்பெறுகிறது. இதற்காகச் சொல்லையோ கருத்தையோ திரும்பத் திரும்பச் சொல்வதுண்டு. சொற்களை இங்கு அளவாகப் பயன்படுத்தி உரைநடையை அழகுபடுத்திக் காட்டியுள்ளார்.

**கருத்து உத்தி:**

ஓர் எண்ணம் சற்று சந்தேகத்துடன் முன் வைகப்படும் போது அது கருத்து என்றும் உறுதியாக முன்வைக்கப்பட்டால் அதை கொள்கை என்றும் கூறுகின்றனர். ‘மழைமான்’ என்ற கதையில் கற்பனையான வாழ்வே சுகம். நிஜம் ஒருபோதும் ருசிப்பதில்லை என்ற அழகான கருத்தை வெளிப்படுத்தி உள்ளார்.

‘மழைமான்’ கதையில் ‘தேவபிரகாஷ்’ எங்கு தேடியும் மான் கிடைக்காத போதும் அதற்காக பல பயணங்கள் மேற்கொண்டு மானைப் பார்க்கத் துடிப்பதும், அலுவலகத்திற்கு போன புதிதில் படி ஏறும் போது 38 படிக்கட்டுகளை தினந்தோறும் எண்ணி மகிழ்வதும் பின் போகப்போக படிகள் இருப்பதே கண்ணிற்குத் தெரிவதில்லை. கால்கள் தானாகவே ஏறிப் போய்விடுகின்றன என்றும் கூறுவதில் இருந்து நம் வாழ்க்கையும் அப்படித்தான் ஒரு செயலை ஆரம்பிக்கும் போது உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் செயல்படுவோம். பின் அதுவே சலிப்பூட்டும் தன்மையாய் மாறிவிடுகிறது என்ற கருத்தை உணர்த்துவது போல் தோன்றுகிறது.

இதே போன்று ஒரு முறை காலை நேரத்தில் மனதில் பென்சீல் சீவி எவ்வளவு நாளாயிற்று என்று ஒரு விசித்திர எண்ணம் தோன்றுகிறது. பகல் முழுவதும் அதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தார். பென்சில் திருகிகள் வந்த பிறகு பிளேடால் பென்சிலை சீவுவது முற்றிலும் கைவிடப்பட்டுவிட்டதும் பென்சிலை உபயோகிப்பதே அரிதாகிப் போனது என்பது தெரிந்தும் பென்சிலை ஏன் பிளேடால் சீவ வேண்டும் என மனம் ஒரு பக்கம் யோசித்தாலும் உடனே அச்செயலை செய்ய வேண்டும் என்ற ஆசைமட்டும் தீவரமடையத் துவங்கியது. பியூன் பழனியை வரவழைத்து அதனை வாங்கி கூர்மையாக பிளேடால் தீட்டினார். இதற்கு எல்லாம் என்ன காரணம் எனச் சிந்திக்கும் போதே அவருக்கு புரிந்தது. இளமையில் கண்ட பொலிவு திரும்ப வரப்போவதில்லை. தான் தோற்றுவிட்டோம், இளமையில் மகிழ்ச்சிகளை அனுபவிக்க மறந்து விட்டோம். தான் ஒரு காலி பாட்டில் மட்டுமே என்று தன் மீதே ஆத்திரமும் கோபமும் அடைந்து கொண்டார்.

தன்னுடைய சிறு ஆசைகளைக் கூட நிறைவேற்றாமல் நிரகாரித்து விட்டு எதிர்காலத்தை நோக்கி ஓடி இளமை போன பிறகு மறைந்து போன நினைவுகளை நினைவூட்டி மீண்டும் முதுமையில் அதைச் செய்தாலும் மகிழ்ச்சி தராது. உதிர்ந்த மலர்கள் மீண்டும் ஒட்டாது, மலராது. வாழ்க்கையும் அப்படித்தான் ஒருவர் போல் இன்னொருவர் வாழ முடியாது. நமக்கான வாழ்க்கையைச் சரியாகப் பயன்படுத்தி மகிழ்வோடு வாழ்ந்து கொள்ள வேண்டும். சென்ற

காலத்தை நினைத்து நேரத்தை செலவழிக்காமல், இருக்கும் காலத்தை இன்பமோடு வாழ்வோம் என்ற கருத்தை இன்பமூட்டும் வகையில் கூறியுள்ளார்.

## கற்பனை உத்தி:

கற்பனை என்பது மனத்தின் ஆற்றல். ஒரு கலைஞருக்கு இருக்க வேண்டிய இன்றியமையாத தகுதி அவனது கற்பனை ஆற்றலேயாகும். புலன் காட்சிகளால் பெறுகின்ற அனுபவத்தை மாற்றியும், திரித்தும், கூட்டியும், குறைத்தும் உணர்ச்சியூட்டக்கூடிய வகையில் கலைவடிவமாய் படைப்பது கற்பனை. கவிஞன் தான் உணர்ந்த உணர்ச்சியையோ, பெற்ற அழகின்ப அனுபவத்தையோ கண்காட்சியையோ, நாமும் முழுமையாகவும் தெளிவாகவும் உணரவோ, அனுபவிக்கவோ, "கண்கூடாகக் கண்டு இன்றுபுறுமாறு அமைத்துக்காட்டும் அரிய கலைத்திறனே கற்பனை"[5] என்று சு.பாலச்சந்திரனின் இலக்கியத் திறனாய்வில் (பக்.95-96) கூறியுள்ள கருத்து எண்ணுதற்குரியது.

கற்பனையின் ஆற்றலை உணரமுடிகிறது, உணர்த்த முடிகிறது. ஆனால் அதனை வரையறை செய்வது எளிதன்று என்று வின்செஸ்டர் கற்பனைக்கு விளக்கம் தருகிறார். கற்பனைத் திறன்தான் ஒரு கலைஞனை ஆளுமையில் காலூன்றச் செய்கிறது. கற்பனை நாயகன் எஸ்ரா தன் கதையின் மூலம் கற்பனை ஆற்றலை கனிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

'மழையாடல்' என்னும் சிறுகதையில் 'சங்கவை' என்ற துறவி தன்னுடைய ஏழு பிக்குணிகளிடம் மழையைப் பற்றி என்ன நினைக்கிறாய்? என்ற வினாக்களை எழுப்புகிறாள். அதற்கு அவர்கள் தியானம், அகம் குளிர்தல், வெறுப்பு தோன்றுகிறது, தண்டனை, பிதற்றல் எனத் தன்னுடைய கற்பனையான பதிலைக் கூறினர். சங்கவையோ கடந்த கால நினைவுகளை மீட்சிக் கொள்ளச் செய்வதற்காகத்தான் மழை வருவதாக எனக்குத் தோன்றுகிறது என்றார்.

தன்னுடைய கற்பனையைக் கூறிய பின் மீண்டும் அதே வினாவினை மறுபடியும் துறவிகளிடம் கேட்டார். ஊர், வீடு, பிடித்த மனிதர், காதல், பிரிவு போன்றவற்றை நினைவுபடுத்துவதாகக் கூறினர்.

சங்கவையோ தனக்கு மரணத்தை நினைவுபடுத்துவதாகக் கூறினாள். ஏனென்றால் ஒரு துளி வானில் இருந்து கீழே விழுந்து கொண்டிருப்பது போலத்தான் நமது வாழ்க்கையும். இந்தத் துளி கடலில் கலந்து விட்டால் நித்யமாகிவிடும். மண்ணில் விழுந்து விட்டால் உறிஞ்சப்பட்டுவிடும். மழை மரணத்தின் நாடகம் போன்றது என்று மழைத்துளியில் தன் கற்பனைகளை தென்றலுடன் வீசும் சாரலாக ஆசிரியர் தெளித்துக் கூறியுள்ளார்.

'சந்தனா' என்ற கதாபாத்திரம் ஒரு கேசத்தில் தன்னுடைய கற்பனை வண்ணங்களை அழகாக கூறியுள்ளார். சந்தனாவின் அம்மா கேசம் மீக நீளமானது. அதைப் பார்த்து சந்தனா பொறாமைப்பட்டு நானும் இதைவிட நீளமான கேசம் வளர்ப்பேன் என்று கூறிய போது அவளுடைய தாய் ஒவ்வொரு ரோமமும் ஒரு ஆசை. நிறைவேறாமல் போன ஆசைகள், கழிந்த ரோமங்களைக் குறிக்கும். வாழ்ந்து அனுபவித்து சலித்த ஆசைகள், நரைத்த ரோமங்களாகி விடுகின்றன என்றாள். ஒரு கேசத்தின் மூலம் கற்பனை மணத்தை நுகரச் செய்துள்ளார்.

ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் கையில் ஒரு கோல் வைத்துக் கொண்டு நாயை விரட்டுவது போல் மழையை விரட்டிக் கொண்டிருந்தான். என்ன செய்கிறாய்? எனக் கேட்ட போது மழை என் பின்னாடியே வருகிறது. அதைத் துரத்திக் கொண்டிருக்கிறேன் என்றான். துரத்தினால் மழை போய்விடுமா? என்று கேட்ட போது சில சமயம் போய்விடும். சில சமயம் பிடிவாதம் பிடிக்கும் என்று ஒரு சிறுவனைப் போல பதில் சொல்லிக் கொண்டு இருந்தான். இறுதியாக மழையும் நானும் ஒன்றுதான். இருவரும் இலக்கில்லாமல் போய்க் கொண்டிருக்கிறோம் என்று கூறினான். ஒரு பார்வையற்றவன் மூலம் ஒரு மனிதனின் கற்பனை என்பது அவர்களுடைய அனுபவங்களாகவே வெளிப்படுகிறது என்று காட்டியுள்ளார். 'கை கால் முளைத்த காற்றே கற்பனை' என்று தன் கற்பனைத் திறத்தால் கற்சிலையாய் மனதில் நிறுத்தியுள்ளார்.

## முடிவுரை:

ஓர் இலக்கியப் படைப்பு பலரால் படிக்கப்படுவதற்கும் பாராட்டப்படுவதற்கும் அதன் இலக்கிய நயமே காரணம் எனலாம். எனவேதான் இலக்கியம் இலக்கியத்திற்காகவே என்ற கோட்பாடு எழுந்தது. இலக்கியம் வாழ்க்கையைக் காட்டும் காலக் கண்ணாடி. அக்கண்ணாடியில் தன்னை பன்முகமாக பிரதிபலித்துக் கொண்டவர் எஸ்ரா. அவருடைய சிறுகதைகளில் இலக்கிய உத்தியான சொல் பயன்பாட்டு உத்தி, உணர்ச்சி உத்தி, கருத்து உத்தி, கற்பனை உத்தி போன்ற நயங்களால் தன்னை மிளிரச் செய்து காட்டியுள்ளார்.

## அடிக்குறிப்புகள்:

1. தொல்காப்பியர் - தொல்காப்பியம் நூற்பா எண் 1610
   பொருளதிகாரம் ப.எண்.553
2. பவணந்தி முனிவர் - நன்னூல் நூற்பா எண் - 15
   எழுத்ததிகாரம் ப.எண் - 16

3. திருவள்ளுவர் - திருக்குறள்
குறள் எண் - 129

4. திருவள்ளுவர் - திருக்குறள்
குறள் எண் - 644

5. சு.பாலச்சந்திரன் - இலக்கியத் திறனாய்வு (ப.எண். 95, 96)

**துணைநூற்பட்டியல்:**


1. எஸ். ராமகிருஷ்ணன் (2019) மழைமான் (சிறுகதைகள்)
தேசந்திரி பதிப்பகம்
டி-1, கங்கை அப்பார்ட்மெண்ட்,
110, 80 அடி ரோடு,
சத்யா கார்டன், சாலிக்கிராமம்,
சென்னை – 600093.

2. சு. பாலசந்திரனின் இலக்கியத்திறனாய்வு (2009) இலக்கியத் திறனாய்வு
New Century Book House (Pvt)
No.80, West Tower Street,
Near Central Theatre,
Madurai – 625001.

3. தொல்காப்பியம் (2009) தமிழண்ணல்,
மோனார் கிராபிக்ஸ்
ஐ கேட்சர், மதுரை.
சிந்தாமணி பதிப்பகம்,
சதாசிவ நகர்,
மதுரை – 650020.

4. நன்னூல் ச.திருஞான சம்பந்தம் (2006) எழுத்ததிகாரம் (காண்டிகை உரை)
கதிர் பதிப்பகம்,
தெற்கு வீதி,
திருவையாறு – 613204.

5. திருக்குறள் - மூலமும் - உரையும் திருக்குறள்

ஜெ. மோகன் (2018) பழைய எண் - 25
புதிய எண் - 14/7
ஜி.எஸ்.பிளாட்ஸ்
(மூன்றாவது மாடி) 2வது தெரு,
கிழக்கு அபிராமபுரம்,
மயிலாப்பூர், சென்னை – 600 002.